**செய்தி வெளியீடு எண்: 240** **நாள்: 09.04.2018**

# செய்தி வெளியீடு

**<u>மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கான இல்லங்களில் உள்ள பயனாளிகளுக்கான மாதாந்திர உணவூட்டுத் தொகை ரூ.400/–லிருந்து ரூ.650/– ஆக உயர்த்தி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை</u>**

மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கான இல்லங்கள் தமிழ்நாட்டில் 31 மாவட்டங்களில், அரசின் நிதியுதவியுடன் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் செயல்பட்டு வருகிறது. மீட்புத் திட்டத்தின் கீழ் குடும்பத்தினரால் கைவிடப்பட்டு சாலைகள் மற்றும் இதர பொது இடங்களில் சுற்றித் திரியும் மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் மீட்கப்பட்டு, இந்த இல்லங்களில் சேர்க்கப்படுகின்றனர். இந்த இல்லங்களில் உறைவிடம், உணவு, மருத்துவம் மற்றும் மறுவாழ்வுப் பணிகள் வழங்கப்பட்டு வருகிறது. இதில் ஒவ்வொரு இல்லத்திலும் 50 மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் அனுமதிக்கப்பட்டு மாநிலம் முழுவதும் மொத்தம் 1550 பயனாளிகள் பயனடைந்து வருகின்றனர்.

தற்சமயம், இந்த இல்லங்களில் உள்ள பயனாளிகளுக்கு உணவூட்டுத் தொகையாக மாதம் ஒன்றுக்கு ரூ.400/– வீதம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஆண்டொன்றுக்கு ரூ.74.40 லட்சம் தமிழ்நாடு அரசினால் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

மனநலம் பாதிக்கப்பட்ட பயனாளிகளின் நலத்தைக் கருத்தில் கொண்டு, தற்போது வழங்கப்பட்டு வரும் உணவூட்டுத் தொகையினை மாதம் ஒன்றுக்கு ரூ.400/–லிருந்து ரூ.650/–ஆக ஏப்ரல் 2018 முதல் உயர்த்தி வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதனால் அரசிற்கு ஆண்டொன்றுக்கு ரூ.46.50 லட்சம் கூடுதல் செலவினம் ஏற்படும்.

அரசு செயலாளர்
மாற்றுத் திறனாளிகள் நலத்துறை

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**